சென்னை மாநகரம் பெரும் வெள்ளப் பேரழிவைச் சந்திக்க நேரிடும்!

தூர்வாரப்படாத கால்வாய்கள், தூங்கிய த.வெ.க. அரசு!

குளம்போல் தேங்கிய சாலைகள்! பொதுமக்கள் - கள ஆய்வாளர்கள் குற்றச்சாட்டு!

சென்னை, அக்.22-

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தனது முதல் கணக்கைத் தொடங்கியுள்ள நிலையில், தலைநகர் சென்னையின் பல இடங்கள் மீண்டும் பழையபடி மழை நீரில் தத்தளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.



கடந்த சனிக்கிழமை இரவு முதல் கொட்டித் தீர்த்த கனமழையால் நகரின் முக்கியச் சாலைகளும் குடியிருப்புப் பகுதிகளும் கழிவு நீரோடு கலந்த மழை நீரில் மூழ்கிக் கிடந்தன.

மழைக்காலம் தொடங்கும் முன்னரே முடிக்கப்பட்டிருக்க வேண்டிய அடிப்படைக் களப்பணியான "மழைநீர் வடிகால்களைத் தூர்வாரும் பணிகளை" (Desilting Works), ஆட்சிக்கு வந்து ஆறு மாதங்கள் ஆகியும் புதிய த.வெ.க. அரசு முறையாகத் தொடங்காததே இந்தத் தீவிர் வெள்ள பாதிப்புகளுக்கு மிக முக்கியக் காரணம் என்று பொதுமக்கள் மற்றும் கள ஆய்வாளர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

பெயரளவில் கூட நடக்காத தூர்வாரும் பணிகள்!

வழக்கமாக ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை முடிந்த உடனேயே, செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களின் தொடக்கத்திலேயே சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பக்கிங்காம் கால்வாய், கூவம், அடையாறு மற்றும் நகரின் 1,600 கிலோமீட்டருக்கும் மேற்பட்ட மழைநீர் வடிகால்களில் படிந்துள்ள சேறு, சகதி மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றித் தூர்வாரும் பணிகள் போர்க்கால அடிப்படையில் முடுக்கிவிடப்படும்.

ஆனால், நடப்பு த.வெ.க. ஆட்சியில் அந்த முன்னேற்பாடுகள் எதுவும் தீவிரமாக முன்னெடுக்கப்படவில்லை. பல இடங்களில் மழைநீர் செல்லும் முக்கியப் பாதைகள் பிளாஸ்டிக் குப்பைகளாலும் மண்ணாலும் அடைபட்டுப் போய் கிடக்கின்றன. வானிலை மையம் பருவமழை எச்சரிக்கை விடுத்தும் கூட, வாய்க்கால்களைச் சுத்தம் செய்யாமல் அரசு அதிகாரிகள் அலட்சியம் காட்டியதன் விளைவு, பெய்த மழைநீர் வடிவதற்கு வழியின்றி சாலைகளிலேயே குளம் போல் தேங்கி நிற்கிறது.

வடசென்னையின் தீராத அவலமும் முடங்கிய வடிகால்களும்!

குறிப்பாக, வியாசர்பாடியின் ஸ்டீபன் சன் சாலை, கணேசபுரம் சுரங்கப்பாதை, பெரம்பூர், ராயபுரம் மற்றும் தண்டையார் பேட்டை போன்ற வடசென்னை பகுதிகளில் நிலைமை மிக மோசமாக உள்ளது. முந்தைய ஆட்சியில் தொடங்கப்பட்ட பல மழைநீர் வடிகால் இணைப்புப் பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுவிட்டன. புதிய த.வெ.க. அரசு அந்தப் பணிகளை விரைவுபடுத்தவும் இல்லை; இருக்கும் வடிகால்களைத் தூர்வாரி தயார் நிலையில் வைக்கவும் இல்லை.

இதன் காரணமாக, சனிக்கிழமை பெய்த மழைக்கு ஞாயிறு பிற்பகல் வரை தண்ணீர் வடியாமல், வீடுகளுக்குள் கழிவு நீர் புகுந்து மக்கள் இயல்பு வாழ்க்கையை இழந்து தவித்தனர். "மழை வரும் என்று அரசுக்குத் தெரியும், ஆனால் வடிகாலில் இருக்கும் மண்ணைக் கூட அள்ளிப் போடாமல் விட்டு விட்டு, இப்போது மக்கள் தலையில் பாரத்தைப் போடுகிறார்கள்" என்று அப்பகுதி மக்கள் குமுறுகின்றனர்.

பம்புகளை வைத்து தற்காலிகக் கண்துடைப்பு!

முன்னேற்பாடாகத் தூர்வாரும் பணிகளைச் செய்யத் தவறியதால், தற்போது தேங்கியுள்ள தண்ணீரை வெளியேற்ற வெறும் டீசல் பம்புகளையும் மோட்டார்களையும் மட்டுமே அரசு நம்பியிருக்கிறது. இயற்கை ஈர்ப்பு விசை மூலம் மழைநீர் தானாகவே கடலுக்குள் செல்லும் வகையில் கால்வாய்களைச் சீரமைத்திருக்க வேண்டிய அரசு, இப்போது ஆங்காங்கே மோட்டார்களை வைத்துத் தண்ணீரை இறைப்பது கண் துடைப்பு நாடகமாகவே தெரிகிறது.

மழைநீர் வடிகால் வலையமைப்பு தூர் வாரப்பட்டு சுத்தமாக இருந்திருந்தால், சில மணி நேரங்களிலேயே தண்ணீர் வடிந்து இயல்பு நிலை திரும்பியிருக்கும். ஆனால், த.வெ.க. அரசின் திட்டமிடப்படாத நிர்வாகக் கோளாறால் மக்கள் நாள் கணக்கில் இருளிலும், முழங்கால் அளவு கழிவுநீரிலும் வாழ வேண்டிய அவலத்திற்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

பருவமழை முழுமையாகத் தொடங்கும் முன் விழித்துக் கொள்ளுமா அரசு?

இப்போது பெய்திருப்பது தொடக்கக் கால மழை மட்டுமே. அடுத்து வரும் நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் கடுமையான காற்றழுத்தத் தாழ்வு மண்டலங்களும், புயல்களும் உருவாகும் வாய்ப்புகள் அதிகம்.

அரசியல் மேடைகளில் பேசுவதையும், முந்தைய அரசுகளின் மீது தொடர்ச்சியாகக் குற்றம் சுமத்துவதையும் விட்டுவிட்டு, த.வெ.க. அரசு உடனடியாக அனைத்து மண்டலங்களிலும் முடங்கிக் கிடக்கும் வடிகால் தூர்வாரும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் தொடங்க வேண்டும். கால்வாய்களில் உள்ள அடைப்புகளை நீக்கி, தண்ணீர் சீராக ஓடுவதற்கான வழிகளைச் செய்யாவிட்டால், அடுத்த பெருமழையில் சென்னை நகரம் இதுவரை கண்டிராத பெரும் வெள்ளப் பேரழிவைச் சந்திக்க நேரிடும் என்பதே கள நிலவரம் விடுக்கும் எச்சரிக்கையாகும்.

முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு பதிலடி... முதல் பக்கத் தொடர்ச்சி

மாத காலகட்டத்தில் மேற்கொண்ட மூலதனச் செலவு எவ்வளவு? புதிய உள்கட்டமைப்புத் திட்டங்களுக்குச் செலவிட்டது எவ்வளவு? தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வரும் திட்டப்பணிகளுக்கு இன்னும் த.வெ.க. அரசால் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ள தொகை எவ்வளவு? இந்த விவரங்களை எல்லாம் அரசு வெளியிடுமா?

நிதி மேலாண்மையின் சாதனையாகக் கூற முடியுமா?

வளர்ச்சிப் பணிகளைத் தாமதப்படுத்தியும், செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கான தொகைகளை வழங்காமலும், பண இருப்பை அதிகமாகக் காட்டி, குறைந்த அளவே கடன் வாங்கிவிட்டு, அதனை நிதி மேலாண்மையின் சாதனையாகக் கூற முடியுமா? வழங்க வேண்டிய தொகைகளை நிலுவையில் வைத்திருப்பது சேமிப்பாகிவிடுமா?

முதல் அரையாண்டில் கடன் குறைந்ததாகக் கூறும் தவெக அரசு, அக்டோபர்-டிசம்பர் காலாண்டில் மட்டும் ரூ.48,000 கோடி கடன் பெறத் திட்டமிட்டுள்ளது. இது முந்தைய காலாண்டில் திரட்டிய ரூ.23,500 கோடியைவிட இரு மடங்குக்கும் அதிகமல்லவா?

முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள முடியாமல் அரசு திணறல்!

த.வெ.க. அரசின் வரவு செலவுத் திட்டத்தில் உத்தேசிக்கப்பட்டதை விட, குறைந்த அளவிலேயே அரசின் வருவாய் இருந்து வரும் நிலையில், முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள முடியாமல் இந்த அரசு திணறுவதால் மட்டுமே கடன் தேவை குறைந்துள்ளது. பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மதிப்பிலான ஒப்பந்த புள்ளிகள் இரத்து செய்யப்பட்டுள்ளன. வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளாதால் சாலைகள் மோசமாக உள்ளன. கட்டிடப் பணிகள் பாதியில் நிற்கின்றன. ஆயிரக்கணக்கான வர்கள் வேலை இழந்து நிற்கின்றனர்.

எனவே, இதனை தங்களின் சாதனை எனச் சொல்லி மக்களை ஏமாற்றுவதை விட்டுவிட்டு, மேற்கொள்ளப்பட்ட மூலதனச் செலவு, செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு இன்னும் விடுவிக்கப்படாமல் வைக்கப்பட்டுள்ள நிலுவைத் தொகை ஆகியவற்றின் முழு விவரங்களையும் வெளியிட்டு, த.வெ.க. அரசு மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு தங்கம் தென்னரசு தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

நிதிச்சுமையில்

தள்ளாடும் அரசுப் போக்குவரத்துக் கழகங்கள்!

ஊதியம் முறையாக வழங்கப்படுமா என ஊழியர்கள் அச்சம்!

சென்னை, அக்.22-

த.வெ.க. அரசின் பேருந்து பயணம் திட்டத்தால் அரசு போக்குவரத்துக் கழகங்களின் நிதிச்சுமை அதிகரித்து, அவை அதலபாதாளத்தில் வீழும் நிலை உருவாகியுள்ளது.

கடந்த ஆட்சிக் காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட விடியல் பயணம் திட்டத்தின்கீழ், அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு மாதந்தோறும் மானியத் தொகை முறையாக வழங்கப்பட்டு வந்தது. தற்போது, இத்திட்டத்தை விஜய் அரசு பெயர் மாற்றம் செய்து விரிவு படுத்தியுள்ளது இதனால் போக்குவரத்துக் கழகங்களின் செலவுகள் அதிகரித்துள்ளது. மானியத் தொகை முறையாக வழங்கப்படுவதில்லை. நடத்துநர்களுக்கான பயணப்படி கூட சரிவரக் கிடைப்பதில்லை பணியாளர்கள் புகார் பல கோடி ரூபாய் இழப்பு, வாகன தேய்மானம், பணியாளர்கள் ஊதியம், பணிமனை செலவு என பெரும் செலவு ஆகிறது.

ஏற்கனவே, நஷ்டத்தில் இயங்கும் போக்குவரத்து நிறுவனங்கள் அதல பாதாளத்தில் வீழும் நிலை உருவாகியுள்ளது. இது அடுத்த மாதம் ஊழியர்களுக்கு ஊதியம் வருமா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

பிஎஸ்என்எல் ஊழியர்களுக்கு வந்த நிலைதான் அரசு போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கும் வரப் போகிறது என்று பலருக்கு அச்சம்.

மாதம்தோறும் அரசு போக்குவரத்து கழகங்களுக்கு மானிய தொகையை விடுவித்தால் மட்டுமே நஷ்டத்தை ஈடு செய்து பேருந்துகளை இயக்க முடியும். தற்போது பல பேருந்துகள் போதிய பராமரிப்பின்றி, இயக்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. த.வெ.க. கட்சி கொடி வண்ணத்தில் விடப்பட்ட பேருந்துகள் ஆங்காங்கே பழுதாகி நின்று விடுகிறது.

இந்த பேருந்துகளை பொதுமக்கள் தள்ளி செல்லும் சூழல் ஏற்பட்டுள்ளது.

அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் நிதி நெருக்கடியில் சிக்காமல் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும். பேருந்துகள் முறையாகப் பராமரிக்கப்பட்டு, போதிய எண்ணிக்கையில் இயக்கப்பட வேண்டும் பேருந்துகள் பழுதாகி நடுவழியில் நிற்பதும், ஊழியர்களுக்குச் சம்பளம் வழங்குவதில் சிக்கல் ஏற்படுவதும் பொதுமக்களைத்தான் நேரடியாகப் பாதிக்கும்.

எனவே, இலவசப் பயணத் திட்டத்துக்கான மானியத்தை உரிய காலத்தில் வழங்கி, பொதுப் போக்குவரத்துச் சேவையைப் பாதுகாக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக இன்று சென்னையில் மாபெரும் போராட்டம்!

சென்னை, அக்.22-

எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக சென்னையில் இன்று மாபெரும் போராட்டம் நடத்தப்படும் என்று இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் அறிவித்துள்ளது.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர், "சென்னை ஐந்தர் மந்தர் 2.0" என்ற பெயரில் எஸ்.ஐ.ஆர்க்கு எதிராக மிகப்பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்தனர். மாணவர் இயக்கங்கள் ஒன்றிணைந்து தமிழ்நாட்டில் எஸ்.ஐ.ஆர்.க்கு எதிராக தொடர் போராட்டங்களில் ஈடுபட உள்ளதாக அவர்கள் கூறினர். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி சென்னை எழும்பூரில் இன்று (அக்டோபர் 22ஆம் தேதி) மாலை 4 மணி முதல் நாளை (அக்டோபர் 23ஆம் தேதி) மாலை 4 மணி வரை தொடர் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தனர்.

மாணவர்களின் போராட்டத்திற்கு அனுமதி மறுக்கப்படுவது ஏன்? என்று முதலமைச்சர் விஜய் பதிலளிக்க வேண்டும் என இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தினர் பா.ஜ.க.வும், தமிழ் நிலையில் உள்ளதாக வலியுறுத்தியுள்ளனர். நாட்டில் உள்ள மாணவர்கள் கண்ட டெல்லியில் உள்ள த.வெ.க.வும் ஒரே மன னம் தெரிவித்தனர்.

பட்டிக்காடும் பட்டணமும்



பட்டிக்காடு : ஏன் தம்பி; படிப்போடு விளையாட்டும் முக்கியம்ன்னு சொல்லி, 5 ஆம் கிளாஸ் வரைக்கும் வாரம் 5 நாளும், அதுக்கு மேலே 12 ஆம் கிளாஸ் வரைக்கும் வாரம் 3 நாளும் விளையாட்டு பிரியட் இருக்கணும்ன்னு. அவசர அவசரமா உத்தரவு போட்டிருக்காங்க தெரியுமா? ஏற்கனவே 6 ஆயிரம் 'பி.டி.மாஸ்டர் போஸ்ட்' காலியா இருக்கு. இந்த லட்சணத்தில் இதை எப்படி செயல்படுத்த முடியும்?

பட்டணம் : **ஆமாமய்யா; எந்த உத்தரவையும் அதை போடுறதுக்கு முன் இது சாத்தியமா; நடை முறைபடுத்த முடியுமான்னு பார்க்கணும். இந்த ரீல்ஸ் 'த.வெ.க.' அரசுக்கு அதைப் பத்தியெல்லாம் சிந்திக்க நேரமேது? நிச்சயம் பிரச்சினை வரும். நீ வேணும்ன்னா பாரேன். இதுக்கும் தி.மு.க. ஆட்சியைத் தான் குறை சொல்வாங்க!**